
# வாலிபன்
# VAALIPAN

இதழ் - 51 / வாலிபர்களுக்கான மாதாந்த சஞ்சிகை / மாசி - 2012



"இயேசுக்கிறிஸ்துவாலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை"
(அப் 4:12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாலிபன்
VAALIPAN

அன்பான "வாலிபன்" வாசகர்களுக்கு,

அன்பின் உருவான ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

இறுதி நாட்கள் நெருங்க நெருங்க உபத்திரவங்கள் அதிகரிப்பதைக் காணக்கூடியதாக உள்ளது (மத் 24:3–12).

சீஷர்கள் இயேசுவிடம் வந்து "இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்? **உம்முடைய வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கும்** அடையாளம் என்ன?" எனக் கேட்டனர்.

இந்த உபத்திரவத்தின் பாதைகளிலும் கிறிஸ்துவை அறிந்த விசுவாசிகளாகிய நாம் என்ன செய்ய வேண்டும்?

நீதியுள்ளவன் இன்னும் நீதி செய்யட்டும். பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும் (வெளி 22:11).

ஜனவரி மாதம் திருகோணமலை மாவட்டத்தில் 5 வகையான ஊழியங்களை நிறைவேற்ற ஆண்டவர் கிருபை புரிந்தார். கிளிவெட்டி, பாட்டாளிபுரம், திருகோணமலை நகரம் போன்ற இடங்களில் 21ம், 22ம் திகதிகளில் நடைபெற்ற ஊழியங்களின் போது நூற்றுக் கணக்கான சிறுவர்களும், வாலிபர்களும், பெரியவர்களும் ஆறுதலடைந்தனர். அநேகர், கிறிஸ்துவின் அன்பைக் கேட்டும் உணர்ந்தும் கொண்டனர். இவ்வூழியங்களின் போது ஒரு காரியத்தை ஆவியானவர் மறுபடியும் மறுபடியும் உணர்த்தியதை உணர்ந்து கொண்டோம். அது என்னவென்றால், நாம் இதுவரை சென்றுவந்த இடங்களில், அதிகம் கஷ்டங்களோடு, கண்ணீரோடு அதிக தேவைகளோடு 'பாட்டாளிபுரம்' எனும் இடத்தைச் சேர்ந்த மக்களையும் அவர்கள் பிள்ளைகளையும் கண்டோம். மனம் நெகிழும் வகையில் பச்சிளம் சிறுவர்கள், குழந்தைகள் வாடிய உருவத்துடன் வறுமையின் நிழலாய் கண்களில் அதிக ஏக்கத்தோடும் வந்திருந்தனர். சீரற்ற போக்குவரத்து நிலவரங்கள்; மின்சார வசதியில்லை; மலசலகூட வசதிகள் இல்லை; தண்ணீர் தட்டுப்பாடு; வைத்திய வசதிகள் இல்லை; நோய், வறுமை, தொழிலின்மை, காணாமற் போனோர் . . . . இவ்வாறு சொல்லிக்கொண்டே போகலாம்.

இதை வாசிக்கின்ற அன்பான தேவ பிள்ளையே! உன்னால் என்ன செய்யக்கூடும்? 'வாலிபன்' ஊழியத்தினூடாக ஏதாவது செய்ய விரும்புகின்றீர்களா?

'வாலிபன்' ஊழியம், ஒரு 'ஊடக ஊழியம்'. செல்வத்துக்கும், வறுமைக்கும் இடையான ஊடகம்; உயர்வுக்கும் தாழ்வுக்குமிடையிலான ஊழியம்; இருக்கிறவைகளுக்கும் இல்லாமைக்குமிடையிலான ஊடக ஊழியம். இவ்வூழியத்தை நீங்கள் பயன்படுத்தி, உங்களிடம் மேலதிகமாக உள்ளதிலிருந்து வறுமையில் வாடுகின்ற இந்த மக்களுக்கு உதவுங் கரத்தை நீட்டுவீர்களா? தயவுசெய்து உதவுவீர்களா?

ஏப்ரல் மாதமளவில் பாட்டாளிபுரம் அதனைச் சேர்ந்த மக்களுக்காக பின்வரும் உதவித் திட்டங்களைச் செய்ய எதிர்பார்க்கின்றோம்.

(a) சிறுவர்கள், பெரியவர்களுக்கான இலவச ஒருநாள் வைத்திய முகாம்.
(b) சிறுவர்களுக்கான வேதாகம விடுமுறைப் பாடசாலை.
(c) ஆடைகள் விநியோகம்.
(d) பாடசாலை உபகரணங்கள் விநியோகம்.
(e) ஹரிக்கன் விளக்குகள் வழங்குதல்.
(f) வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்பும் நிகழ்வுகள்.

இவற்றில் ஏதாவதற்கு நீங்கள் மனமுவந்து உதவ விரும்பினால் தயவுசெய்து எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

கர்த்தர் உங்களை அளவில்லாமல் ஆசீர்வதிப்பாராக! *கிறிஸ்துவின் பணியில்*

ஆசிரியர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உபத்திரவத்தைத் தாண்டி ஜெயம் கொள்ள...

**"ஜீவனுக்கு போகிற வாசல் இடுக்கமும், வழிநெருக்கமுமாயிருக்கிறது. அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்" – (மத்தேயு 7:14)**

நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்வதற்கு நாம் நெருக்கமான வழிக்கூடாக பிரவேசிக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

ஜீவனை அடைவதற்கு பரிசுத்தத்தில் நடக்க அழைக்கப்படுகின்றோம். நாங்கள் பரிசுத்தத்தில் நடப்பதானால் அனுதினம் பல யுத்தங்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கின்றது. அதைத்தான் திருமறையும் எபேசியர் 6ம் அதிகாரம் 11ம், 12ம் வசனங்களில் கூறுகின்றது. "நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள். ஏனெனில் மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டமுண்டு.




ஆகவே, பரிசுத்த வாழ்வின் போராட்டத்தை நாங்கள் ஜெயமாக மாற்ற கிறிஸ்து எங்களுக்குக் கொடுக்கிற காரியம் தான் எபேசியர் 6:11 இல் கூறுகிற பிரகாரம் சர்வாயுத வர்க்கத்தையும் தரித்து போராடும் அழைப்பு. வசனத்தை உற்று நோக்குவோமானால், சர்வ + ஆயுத + வர்க்கத்தையும் அதாவது அனைத்து ஆயுதங்களையும் தரித்திருக்க வேண்டும். அவையாவன,

- சத்தியம் எனும் கச்சை
- நீதி எனும் மார்க்கவசம்
- சமாதானத்தின் சுவிசேஷத்துக்குரிய ஆயத்தமென்னும் பாதரட்சை
- விசுவாசம் என்னும் கேடகம்
- இரட்சண்யம் எனும் தலைச்சீரா
- தேச வசனமாகிய ஆவியின் பட்டயம்
- ஆவியினாலே ஜெபம்

(எபேசியர் 6:14-18)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை அனைத்தையும் எவ்வேளையிலும் தரித்தவர்களாகத்தான் யுத்தம் பண்ணி நித்தியத்தை நோக்கி ஜெயத்தோடே ஓடமுடியும்.

நாங்கள் இந்த பரிசுத்தத்துக்கான போராட்டத்தில் ஜெயம்கொள்வோமானால் அவர் எங்களுக்காக ஆயத்தம் பண்ணின சகலவித ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொள்ளலாம். ஜெயங்கொண்டு நித்தியத்தைப் பிடித்துக்கொள்கிறவனுக்கு சர்வ வல்லமையுள்ள பிதாவாகிய தேவன்

1) தேவனுடைய பரதீசின் மத்தியிலிருக்கிற ஜீவ விருட்சத்தின் கனியைப் புசிக்கக் கொடுப்பார். (வெளி 2:7)

2) இரண்டாம் மரணத்தினால் சேதப் படுவதில்லை. (வெளி 2:11)

3) மறைவான மன்னாவை புசிக்கக் கொடுத்து, வெண்மையான குறிக்கல்லையும், அந்தக் கல்லின் மேல் எழுதப்பட்டதும் வேறொருவனும் அறியக்கூடாததுமான புதிய நாமம் (வெளி 2:17)

4) நான் (இயேசுக்கிறிஸ்து) என்பிதாவினிடத்தில் அதிகாரம் பெற்றதுபோல், ஜாதிகளின் மேல் அதிகாரம் கொடுப்பேன் (வெளி 2:26)

5) வெண் வஸ்திரம் தரிப்பிக்கப்படும், ஜீவ புஸ்தகத்திலிருந்து அவனுடைய நாமத்தை கிறுக்கிப் போடாமல் என் (இயேசு) பிதா முன்பாகவும் அவருடைய தூதர் முன்பாகவும் அவன் நாமத்தை அறிக்கையிடுவேன் (வெளி 3:5)

6) என் (இயேசு) தேவனுடைய ஆலயத்தின் தூணாக்குவேன் (வெளி 3:12)

7) நான்(இயேசு) ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடே கூட உட்கார்ந்தது போல, ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடு கூட உட்காரும்படிக்கு அருள் செய்வேன் (வெளி 3:21)

வாகரை பணியை பிரதிநிதிப்படுத்துமுகமாக

**சுதன்**




**நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள்;**
**உபத்திரவத்திலே பொறுமையாயிருங்கள்;**
**ஜெபத்திலே உறுதியாய்த் தரித்திருங்கள்**

**(ரோமர் 12:12)**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உபத்திரவத்திலும் கர்த்தரோடு....

**"உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு. ஆனாலும் திடன் கொள்ளுங்கள். நான் உலகத்தை ஜெயித்தேன்"**
**(யோவான் 16:33)**

கிறிஸ்துவுக்குள் பிரியமான வாலிபர்களே! உலகத்திலே உபத்திரவம் உண்டு என்று பல நூற்றாண்டுகளுக்கு முன்னமே வேதாகத்தில் எழுதப்பட்டாயிற்று. உபத்திர வம் என்கின்ற போது வியாதியின் தொடுகை, வறுமை, உறவுகளின் பிரிவு, தோல் விகள் என்பவற்றினை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

இப்படிப்பட்ட உபத்திரவங்களை அனுபவித்தும் கர்த்தரை விட்டு விலகாமல், அவருடன் நெருங்கி வாழ்ந்த நபர் தான் யோபு. பிசாசானவன் யோபுவை சோதிக்கும்படி அவனுடைய ஆஸ்தி, செல்வங்கள், பிள்ளைகள் எல்லாவற்றையும் அவனிடத்தில் இருந்து பிரித்துவிட்டபோதும் யோபு கர்த்தருக்கு எதிராக பாவஞ்செய்யவும் இல்லை. குற்றஞ்சாட்டவும் இல்லை. மாறாக யோபு அந்த உபத்திரவத்தின் மத்தியிலும் கூறிய வார்த்தையை யோபு 1:21 இல் வாசிக்கலாம். அதேபோல் பிசாசானவன் கொடிய வியா தியினால் யோபுவை வாதித்தான். அப்பொழுது பொறுமையை இழந்த மனைவி கர்த்தரை தூஷிக்கும்படி கூறினபோதும் யோபு அவளுக்கு மறு உத்தரவாக. **"தேவன் கையிலே நன்மையைப் பெற்ற நாம் தீமையையும் பெற வேண்டாமா"** என்றான் **(யோபு 2:10).**

எனக்கு அருமையான சகோதர சகோதரிகளே! இன்று எம்மையும் யோபுவுடன். ஒப்பிட்டுப் பார்ப்போம். கர்த்தர் இன்று எனக்கும் உங்களுக்கும் செய்த ஏராளமான நன்மைகளையும், தந்த ஆசீர்வாதங்களையும் மறந்து ஒரு உபத்திரவம் சம்பவிக்கின்ற போது கர்த்தருக்கு எதிராக குற்றஞ்சொல்லுகிறவர்களாய் இருக்கின்றோமா? அல்லது யோபுவைப் போல சந்தோஷத்தில் மாத்திரம் அன்றி உபத்திரவத்திலும் கர்த்தரை நெருங்கி வாழ்கின்றோமா??? சிந்திப்போம்....

"ரோமர் 5:3" இல் கூறப்பட்டுள்ளவாறு **உபத்திரவத்திலும் பொறுமையுடன்** கர்த் தருக்குப் பிரியமானவர்களாக வாழவேண்டும். எமது பாவங்களுக்காக, இயேசு மனுஷ குமாரனாக அவதரித்து, உபத்திரவப்பட்டு, அவமானங்களைச் சந்தித்து, சிலுவையில் அறையப்பட்டார். இயேசப்பாவைப் போல் உபத்திரவம் எமக்கு நேரிட்டதில்லை, நேரிடப் போவதுமில்லை. ஆகையால் உபத்திரவம் வரும்போது இயேசப்பாவை அவர் நமக்காக பட்ட கஷ்டத்தைச் சிந்தித்தோமேயானால் இன்னும் அவரை நெருங்கி வாழமுடியும்.

கர்த்தருடைய இரண்டாம் வருகைக்காகக் காத்திருக்கின்ற அவருடைய பிள்ளைக ளாகிய நாங்கள் எங்களுடைய வாழ்விலே என்ன உபத்திரவம் நேரிட்டாலும் கர்த்தரோடு நெருங்கி வாழ வாஞ்சிப்போம்.

சகோதரி **P.குளோறி பிறிசில்லா**
வாலிபன் குடும்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்துவில் மகிழ்ச்சி!

## 1. இரட்சிப்பின் மகிழ்ச்சி

இதோ, இவரே நம்முடைய தேவன்; இவருக்காகக் காத்திருந்தோம், இவர் நம்மை இரட்சிப்பார்; இவரே கர்த்தர், இவருக்காகக் காத்திருந் தோம்; இவருடைய இரட்சிப்பினால் களிகூர்ந்து மகிழுவோம்.

**- ஏசாயா 25:9**

அவன் அவர்களைத் தன் வீட்டிற்குக் கூட்டிக் கொண்டுபோய், அவர்க ளுக்குப் போஜனங்கொடுத்து, தன் வீட்டார் அனைவரோடுங்கூடத் தேவனிடத்தில் விசுவாசமுள்ளவனாகி மனமகிழ்ச்சியாயிருந்தான்.

**- அப் 16:34**

## 2. தேச சமூக மகிழ்ச்சி

நான் அவர் அருகே செல்லப்பிள்ளையாயிருந்தேன்; நித்தம் அவருடைய மனமகிழ்ச்சியாயிருந்தது, எப்பொழுதும் அவர் சமுகத்தில் களிகூர்ந்தேன்.

**- நீதி 8:30**

ஜீவமார்க்கத்தை எனக்குத் தெரியப்படுத்துவீர்; உம்முடைய சமுகத் தில் பரிபூரண ஆனந்தமும், உம்முடைய வலதுபாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு.

**- சங் 16:11**

## 3. பரிசுத்த ஆவியினாலுண்டாகும் மகிழ்ச்சி

தாகமுள்ளவன்மேல் தண்ணீரையும், வறண்ட நிலத்தின்மேல் ஆறுக ளையும் ஊற்றுவேன்; உன் சந்ததியின்மேல் என் ஆவியையும், உன் சந்தானத்தின்மேல் என் ஆசீர்வாதத்தையும் ஊற்றுவேன். அதினால் அவர்கள் புல்லின் நடுவே நீர்க்கால்களின் ஓரத்திலுள்ள அலரிச் செடிகளைப்போல வளருவார்கள்.

**- ஏசாயா 44:3,4**

ஓ, தாகமாயிருக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் தண்ணீர்களண் டைக்கு வாருங்கள்; பணமில்லாதவர்களே, நீங்கள் வந்து, வாங்கிச் சாப்பிடுங்கள்; நீங்கள் வந்து, பணமுமின்றி விலையுமின்றித் திராட்ச ரசமும் பாலும் கொள்ளுங்கள். நீங்கள் அப்பமல்லாததற்காகப் பணத் தையும், திருப்திசெய்யாத பொருளுக்காக உங்கள் பிரயாசத்தையும் செலவழிப்பானேன்? நீங்கள் எனக்குக் கவனமாய்ச் செவிகொடுத்து, நலமானதைச் சாப்பிடுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமா கொழுப் பான பதார்த்தத்தினால் மகிழ்ச்சியாகும்.

**- ஏசாயா 55:1,2**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 4. தேவ ஆராதனையின் மூலம் மகிழ்ச்சி

மகிழ்ச்சியோடே கர்த்தருக்கு ஆராதனைசெய்து, ஆனந்தசத்தத் தோடே அவர் சந்நிதிமுன் வாருங்கள்.

**- சங் 100:2**

முன்னே நான் பண்டிகையை ஆசரிக்கிற ஜனங்களோடே கூட நடந்து, கூட்டத்தின் களிப்பும் துதியுமான சத்தத்தோடே தேவாலயத் திற்குப் போய்வருவேனே; இவைகளை நான் நினைக்கும்போது என் உள்ளம் எனக்குள்ளே உருகுகிறது.

**- சங் 42:4**

### 5. வேத வசனத்தின் மூலம் மகிழ்ச்சி

மனுபுத்திரனே, நான் உனக்குக் கொடுக்கிற இந்தச் சுருளை நீ உன் வயிற்றிலே உட்கொண்டு, அதினால் உன் குடல்களை நிரப்பு வாயாக என்றார்; அப்பொழுது நான் அதைப் புசித்தேன்; அது என் வாய்க்குத் தேனைப்போல் தித்திப்பாயிருந்தது.

**- எசேக் 3:3**

உம்முடைய வார்த்தைகள் கிடைத்தவுடனே அவைகளை உட்கொண் டேன்; உம்முடைய வார்த்தைகள் எனக்குச் சந்தோஷமும், என் இருதயத்துக்கு மகிழ்ச்சியுமாயிருந்தது; சேனைகளின் தேவனாகிய கர்த்தாவே, உம்முடைய நாமம் எனக்குத் தரிக்கப்பட்டிருக்கிறது.

**- எரே 15:16**

### 6. ஸ்தோத்திரப்பலி செலுத்துவதில் மகிழ்ச்சி

அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலியை அவர் மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக்கடவோம்.

**- எபி 13:15**

அவர்கள் கர்த்தரை அவருடைய கிருபையினிமித்தமும், மனுபுத் திரருக்கு அவர் செய்கிற அதிசயங்களினிமித்தமும் துதித்து, ஸ்தோத்திரபலிகளைச் செலுத்தி, அவருடைய கிரியைகளை ஆனந்த சத்தத்தோடே விவரிப்பார்களாக.

**- சங் 107:21,22**

### 7. கிறிஸ்துவின் வருகையில் மகிழ்ச்சி

நாம் சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்து அவருக்குத் துதிசெலுத்தக் கடவோம். ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது, அவரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டைய மனைவி தன்னை ஆயத்தம்பண்ணினாள் என்று சொல்லக் கேட்டேன். பின்னும், அவன் என்னை நோக்கி: ஆட்டுக்குட்டியானவரின் கலியாணவிருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் பாக்கியவான்கள் என்றெழுது என்றான். மேலும், இவைகள் தேவனுடைய சத்தியமான வசனங்கள் என்று என்னுடனே சொன்னான்.

**- வெளி 19:7,9**

அப்படியே கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் ஆனந்தக்களிப்புடன் பாடி சீயோனுக்குத் திரும்பிவருவார்கள்; நித்திய மகிழ்ச்சி அவர்கள் தலையின்மேல் இருக்கும்; சந்தோஷமும் மகிழ்ச்சியும் அடைவார்கள்; சஞ்சலமும் தவிப்பும் ஓடிப்போம்.

**- ஏசா 51:11**

ராஜகுமாரத்தி உள்ளாகப் பூரணமகிமையுள்ளவள், அவள் உடை பொற்சரிகையாயிருக்கிறது. சித்திரத்தையலாடை தரித்தவளாய், ராஜாவினிடத்தில் அழைத்துக் கொண்டுவரப்படுவாள்; அவள் பின்னாலே செல்லும் அவளுடைய தோழிகளாகிய கன்னிகைகள் உம்மிடத்தில் கூட்டிக்கொண்டுவரப்படுவார்கள். அவர்கள் மகிழ்ச்சியோடும் களிப்போடும் வந்து, ராஜ அரமனைக்குள் பிரவேசிப்பார்கள்.

**- சங் 45:13-15**

சகோ. அனோஜன்

# கவிதைப்போட்டி - 35

கீழேயுள்ள வசனத்திற்குப் பொருத்தமான சமகால சிந்தனையோடு 4 வரிகளுக்குள் அடங்கக்கூடிய உங்கள் மனதில் தோன்றும் கவிதைகளை தபாலட்டையில் எழுதி அனுப்புங்கள். சிறந்த கவிதைகள் எதிர்வரும் இதழில் பிரசுரிக்கப்படுவதுடன் பரிசில்களும் வழங்கப்படும்.

**“அநாதி சிநேகத்தால் உன்னைச் சிநேகித்தேன்....”**
**(எரேமியா 31:3)**

இறுதித் திகதி **04.03.2012**

## கவிதைப் போட்டி - 34ல் வெற்றிபெற்ற சிறந்த கவிதை

**“கர்த்தருக்குள் சந்தோஷமாய் இருங்கள்” (பிலி.4:4)**



வாழ்வின் வசந்தத்திலும் இலையுதிர்விலும்
தாழ்விலும் உயர்விலும் - என்
நேசர் என் பக்கமாய் இருக்கையிலே
சந்தோஷம்தான் என் வாழ்வு கர்த்தருக்குள்


த. ஜெய்ப்பிரியா
தன்னாமுனை,
மட்டக்களப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப் போட்டி - 50

உருவாக்கம் : J.சேரா




## இடமிருந்து வலம்

01) இரத்தத்தில் தோய்க்கப்பட்ட இதனை இயேசு தரித்திருந்தார் (உதவி: வெளிப்படுத்தின விசேஷம்).

03) உங்களுக்கு உண்டானவைகளில் இது கொடுங்கள். அப்பொழுது சகலமும் உங்களுக்கு சுத்தமாயிருக்கும் (குழம்பியுள்ளது).

05) ரூத் கதிர் பொறுக்கிய இந்த நிலம் போவாசுடையதாயிருந்தது.

06) சாமுவேலின் தலையின் மேல் இவன் கத்தி படவில்லை (திரும்பியுள்ளது).

07) "இன்றைக்கு நீ என்னுடனேகூட இதில் இருப்பாய்" என்றார் இயேசு (3வது எழுத்து இல்லை).

08) உங்களைத் தொடுகிறவன் தேவனுடைய இதைத் தொடுகிறான்.

09) ஆதாமுக்கும் ஏவாளுக்கும் தேவன் இந்த உடைகளை உடுத்தினார்.

10) இஸ்ரவேலில் ஆசரிக்கப்படும் ஒரு பண்டிகையுடன் தொடர்புடையது (திரும்பியுள்ளது).

12) மூன்றாம் நாளில் தேவன் படைத்தவற்றில் இதுவும் ஒன்று.

## மேலிருந்து கீழ்

01) புதிய எருசலேம் நகர மதிலின் முதலாம் அஸ்திபாரமான இரத்தினம்.

03) இவனுக்கு விரோதமாக பொய்ச் சாட்சி சொல்லக்கூடாது.

04) பேதுரு இவனுடைய காதை வெட்டினான்.

07) மரியாள் இதில் பரிமள தைலம் கொண்டுவந்து இயேசுவின் பாதங்களில் பூசினாள் (குழம்பியுள்ளது).

09) லோத்து இந்த இடத்தைவிட்டு புறப்பட்ட நாளிலே வானத்திலிருந்து அக்கினியும் கந்தகமும் வருஷித்து எல்லாரையும் அழித்துப்போட்டது (முதல் எழுத்து இல்லை).

11) நோவாவினால் சபிக்கப்பட்டவன் (தலைகீழ்).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 49 இற்கான விடைகள்

### இடமிருந்து வலம்

01) மார்கீ (மாகீர்)
03) கலப்பை
05) ரிமேபா (மேரிபா)
06) உ ரியா
08) மனைவி
10) ல்தத்பிச (சபித்தல்)
13) அஸ்தரோத்
16) ர்கா (கார்)
18) ம்வபா (பாவம்)
20) வாசுயோ (யோசுவா)
22) நிலை
23) மான்

### மேலிருந்து கீழ்

01) மாறுஉல் (உறுமால்)
02) கீரியாத்அர்பா
03) கபாமசத (தசமபாகம்)
04) பைச (சபை)
07) ரித (தரியு)
09) விதுத் (வித்து)
11) பிஸ்கா
14) ரோதுவா (துரோவா)
15) ரோம்நி (நிம்ரோத்)
17) சீயோன்
19) வலை
21) சுமா (மாசு)

குறுக்கெழுத்துப் போட்டி 49க்கான சரியான விடை அனுப்பியவர்களில் பரிசுக்குரிய அதிஷ்டசாலி

**டடல்சி சுரங்கிக்கா**
விபுலானந்தா வீதி, திருக்கோவில் -03.

இப்போட்டியில் வெற்றி பெறுபவர் ஒரு வருடத்திற்கான எம் இதழைத் தொடர்ந்து இலவசமாகப் பெறுவார்.

**குறுக்கெழுத்துப்போட்டி 50ற்கான விடைகளை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி : 04.03.2012**

**அனுப்ப வேண்டிய முகவரி :**

ஆசிரியர்,
குறுக்கெழுத்துப்போட்டி - 50
"வாலிபன்",
கோட்டைமுனை மெதடிஸ்த ஆலயம்
மட்டக்களப்பு.

## சிறுவர்களுக்கான

## வினா விடைப் போட்டி இலக்கம் - 42

1) தீர்க்கதரிசி சாமுவேலின் தகப்பன் பெயர் என்ன?

.......................................................................................

2) தீர்க்கதரிசி சாமுவேலின் தாயின் பெயர் என்ன?

.......................................................................................

3) தீர்க்கதரிசி சாமுவேலின் பிறப்பின் காலத்தில் இருந்த ஆசாரியன் யார்?

.......................................................................................

4) சாமுவேலை ஆலயத்தில் விடும்போது அவனது பெற்றோர் பலியிட்டது என்ன?

.......................................................................................

5) கர்த்தர் யாரை குப்பையிலிருந்து உயர்த்துகிறார்?

.......................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வினா விடைப் போட்டி
**41 இற்கான விடைகள்**

1) கானா
2) நிக்கொதேமு
3) ஜலத்தினாலும் ஆவியி னாலும்
4) 12 பேர்
5) எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்.

**அ.அனந்தர்ஷனா**
மெதடிஸ்த ஆலயம்,
தன்னாமுனை.

☞ இப்போட்டியில் வெற்றி பெறுபவர் அழகிய புத்தகம் ஒன்றினைப் பரிசாகப் பெறுவர்.

☞ வினா விடைப்போட்டி 42இற்கான விடைகளை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி : **04.03.2012**

அனுப்ப வேண்டிய முகவரி :
ஆசிரியர்,
வினாவிடைப் போட்டி - 42
'வாலிபன்' -
கோட்டைமுனை மெதடிஸ்த ஆலயம்,
மட்டக்களப்பு.

### போட்டி பற்றிய நிபந்தனைகள் :

- 16 வயதிற்குட்பட்டவர்களாய் இருக்க வேண்டும்.
- ஞாயிறு பாடசாலை அதிபர் / ஆசிரியரின் கையொப்பத்துடன் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் போன்றவை தெளிவாய் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

## உபத்திரவத்தின் மத்தியில் ஆண்டவரை நெருங்குதல்

**மிருனா**
அமிர்தகழி.

ஆயிரம் துன்பம் எனைச் சூழ்ந்தபோதும்
கண்ணிரண்டில் கண்ணீர் குளமான போதும்
சுற்றத்தில் சுமைகள் பல வந்தபோதும் - இறைவா
உம் அண்டை வந்ததும் ஒரு புள்ளியாய் போனதே - என் துயரங்கள்


பிணி வந்து என்னை பிடித்தபோதும்
கடன் தொல்லை என்னை ஆட்கொண்ட போதும்
மரணம் என்னை அழைக்கும் நிலை வரினும்
வந்திடுவேன் உம் அருகே - வந்த துன்பம் பின்னிட்டிடும்



சொல்லொணா துன்பம் அகத்தினில் இருந்தபோதும்
உம் ஆலய சந்நிதி வந்ததுமே - வந்த
(இடர்) தடம் தெரியாது போனதுவே
இறைவா உம் அருகே நானிருந்தால் - அது என்னை வென்றிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாடுகளின் மத்தியிலும்....

"**எ**னக்கு மட்டும் ஏன் இந்தப் பாடுகள்? என் வாழ்வில் மட்டும் ஏன் இத்தனை பிரச்சினைகள்? இத்தனை போராட்டங்களும் ஏன் என்னைத் தொடர்ந்து வருகின்றன...? ஐயோ! என்ன வாழ்க்கை இது?...." என்ற பலவிதமான கேள்விகளோடு இன்று நாம் வாழ்ந்துகொண்டிருக்கலாம். நாம் அனுபவிக்கின்ற ஒவ்வொரு பிரச்சினைகளுக்கும், உபத்திரவங்களுக்கும் நிச்சயமாகவே முடிவு உண்டு. உபத்திரவங்களை நினைத்து நினைத்து வேதனைப்பட்டு கண்ணீர் வடிப்பதைவிட அவற்றையெல்லாம் நம்மை உருவாக்கி ஆதரித்து வருகிற தேவனிடம் கூறி அவரிடமிருந்து தீர்வைப் பெற்றுக்கொள்வது எவ்வளவு சுலபமான காரியம். பல வேளைகளில் இதை நானும் நீங்களும் மறந்துவிடுகிறோம்.

"கர்த்தர்மேல் உன் பாரத்தை வைத்துவிடு, அவர் உன்னை ஆதரிப்பார்...." (சங்.55:12) என்ற தேவ வார்த்தையின்படி எங்களை ஆதரிக்கிற, அரவணைக்கிற ஒரு தகப்பன் எங்களோடு கூட இருக்கிறார் அல்லவா? அப்படி தேவன் நமக்கு வாக்குப்பண்ணியிருந்தும் கூட, பாடுகள் வருகிறபொழுது நமது நிலை என்ன? நமக்கு வருகிற உபத்திரவங்களினால் நாம் தேவனை விட்டுப் பின்வாங்கிப்போய் இருக்கின்றோமா? மாறாக இவ்வுலக பாடு என்னை என்ன செய்திடும்? என்ற நம்பிக்கையோடு ஆண்டவரை இன்னும் கிட்டிச்சேர வாஞ்சையுள்ளவர்களாய் இருக்கின்றோமா? **"இயேசு தாமே சோதிக்கப்பட்டுப் பாடுபட்டதினாலே, அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவி செய்ய வல்லவராயிருக்கிறார்" (எபிரெயர் 2:18).** சோதனைகள், பாடுகள் வருகிறபொழுது ஆண்டவரை விட்டு தூரம் போய்விடாமல் அவர் கரத்தைப் பிடித்து நடக்க வாஞ்சிப்போம். நிச்சயமாகவே நாம் பாடுகளிலிருந்து விடுதலை பெற தேவன் நமக்கு உதவி செய்வார்.

**ஒரு சமயம் ஒருவர் தன் குறும்புக்கார மகனைக் கையில் பிடித்துக்கொண்டு, மிக அதிகமான போக்குவரத்து நிறைந்த வீதி ஒன்றைக் கடக்க நேர்ந்தது. "மகனே... என்னுடன் கவனமாக, வேகமாக கடந்துவரவேண்டும். அந்தப் பக்கமிருந்தும் இந்தப் பக்கமிருந்தும் வேகமாக வரும் வாகனங்களுக்கு விலகி நடக்கவேண்டும்" என்று கூறி துரிதமாக நடந்து மறுபக்கத்தை அடைந்தார்.**

**மகனைக் கவனித்தார்... அவருக்குத் தூக்கிவாரிப் போட்டது. காரணம் அந்தச் சிறுவன் தன் கண்களை மூடிக்கொண்டிருந்தான். அவர் அவனைக் கடிந்துகொண்டார். இனிமேல் அப்படி கவலையீனமாக நடந்துகொள்ளக்கூடாது என்று**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்திமதி கூறினார். கண்களைத் திறந்த அவன் புன்முறுவலுடன் அப்பா.... நீங்கள் தான் என் கைகளைப் பிடித்திருக்கிறீர்களே! பிறகு நான் ஏன் இங்குமங்கும் பார்க்க வேண்டும்? என்று கூறினான். நியாயம் தானே? தந்தையும் சிரித்துக் கொண்டார்.

இதைப்போலவே எம்முடைய வாழ்க்கையிலும் எம்மோடு கூட வருகிற, எம்மைக் கரம்பிடித்து வழிநடத்துகின்ற ஒரு தகப்பன் இருக்கிறார் அல்லவா? எந்த நிலையிலும் எங்களைத் தள்ளிவிடாமல் நேசிக்கின்ற அந்த நேசரைப் பற்றிக்கொண்டு உபத்திரவத்திலும் பொறுமையாயிருக்கக்கடவோம்.

**"வானங்களின் வழியாய்ப் பரலோகத்திற்குப் போன தேவகுமாரனாகிய இயேசு என்னும் மகா பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறபடியினால், நாம் பண்ணின அறிக்கையை உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருக்கக் கடவோம். நம்முடைய பலவீனங்களைக் குறித்து பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல் எல்லாவிதத்திலும் நம்மைப் போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார்.**

**ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யும் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்" (எபிரெயர் 4:14-16)**

"கடந்தகால சிக்கல் எனும்
சிறைக்குள் உன்னை அடைத்துக்கொள்ளாமல்
உன் எதிர்காலத்தை வடிக்கும் சிற்பியாக
ஆக்கிக்கொள்!"

**J.டெய்சி**
**கோட்டைமுனை**

**"வாலிபன்" ஊழியத்தின் திருச்சபை ஒருங்கிணைப்பாளர்களுக்கான**

## ஒருநாள் பாசறை - 07/03/2012

கிறிஸ்துவுக்குள் பிரியமான வாலிப சகோதர சகோதரிகளே!

எமது வாலிபன் ஊழியத்தின் ஒருங்கிணைப்பாளர்களுக்கான ஒருநாள் பாசறை எதிர்வரும் மார்ச் மாதம் 7ந் திகதி இடம்பெறவுள்ளது. இதில் கலந்துகொள்ள ஆர்வமுள்ள வாலிபர்கள் தங்கள் பெயர், விலாசம், சபை, தொலைபேசி இலக்கங்கள் அடங்கிய தங்களது சபையின் போதகரினால் உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை கீழ் குறிப்பிடப்படும் முகவரிக்கு **01.03.2012** இற்கு முன் குறிப்பிடப்படும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**இடம் :** செல்வநாயகம் மண்டபம் (கோட்டைமுனை)

**திகதி :** 07.03.2012

**நேரம் :** மு.ப.8.30 - பி.ப. 1.00

விண்ணப்பம் அனுப்பி வைக்கவேண்டிய முகவரி :

**"வாலிபனின் ஊழியங்கள்"**
மெதடிஸ்த ஆலயம், கோட்டைமுனை,
மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உத்திரவத்தின் மத்தியிலும் ஆண்டவரை நெருங்குதல்

**"ஆதலால் இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்ல"**
**(ரோமர் 8:18)**

உலகத்தில் பிறந்த ஒவ்வொரு மனிதரின் வாழ்விலும் துன்பங்கள், கண்ணீர்கள், இழப்புக்கள், ஏமாற்றங்கள், தோல்விகள், எதிர்பார்க்காத அதிர்ச்சிகள் ஏற்படுவது தவிர்க்க முடியாததொன்று. அதிலும் குறிப்பாக பிதாவானவரால் தெரிந்துகொள்ளப்பட்டு, முன்குறிக்கப்பட்டு, அழைக்கப்பட்டவர்களாய் வாழ்ந்து கொண்டிருக்கும் தேவ பிள்ளைகளின் வாழ்வில் இவ்வாறான போராட்டங்கள், உபத்திரவங்கள், பாடுகள் இன்னும் அதிகமாகவே உண்டு. காரணம், எமது போராட்டமானது வெறும் மாம்சத்தோடும், இரத்தத்தோடுமல்ல. துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் இருக்கிறது. (எபே 6:12). நாம் இரட்சிக்கப்பட்ட நாளிலிருந்தே போராட்டங்களும் ஆரம்பமாகிறது. மீட்கப்பட்ட ஒவ்வொரு பிள்ளைகளின் விசுவாசத்தை முறியடிப்பதற்காகவும், பெலவீனப்படுத்துவதற்காகவும், கர்த்தரில் நாம் கொண்டுள்ள உறுதியை சோதிப்பதற்காகவும் இவ்வாறான பாடுகளை பிசாசானவன் எமது வாழ்வில் கொண்டுவரும்போது, மெய்யான தேவனை அறிந்துகொண்ட, அவரது புத்திரசுவீகாரத்தின் ஆவியைக் கொண்டுள்ள நாம் ஒவ்வொருவரும் அவற்றை எவ்வாறு எதிர்கொள்கிறோம்? கடினமான சூழ்நிலைகளின் போது எமது விசுவாச வாழ்வின் நிலைப்பாடு என்ன?

உபத்திரவங்கள், பாடுகள் என்று சிந்திக்கும் போது, எமக்கு உடனே ஞாபகத்திற்கு வருபவர் யோபு. மிகப்பெரிய செல்வந்தனான அவர், ஒரே நாளில் தனக்குண்டான யாவற்றையும் இழந்து போனார். இச்சோதனைக்குக் காரணம் கர்த்தரின் பார்வையில் அவன் உத்தமனாகவும், சன்மார்க்கனாகவும், பொல்லாப்புக்கு விலகுகிறவனாயும் தேவனுக்குப் பயந்தவனாயும் இருந்தமையே ஆகும். எனினும் அப்படியொரு துயரமான, கடினமான சூழ்நிலையிலும் யோபு தனது விசுவாசத்திலிருந்து பின்வாங்கவில்லை. கர்த்தரையே உறுதியாக பற்றிக் கொண்டிருந்தான். ஆகவேதான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டவர் இறுதியில் அவனுடைய துக்க நாட்களை முடித்து, அவனுடைய முன்னிலைமையைப் பார்க்கிலும் பின்னிலைமையை ஆசீர்வதித்தார் (யோபு 42:12).

அப்.பவுல் தேவனுடைய ஊழியத்தினிமித்தமாக எதிர்கொள்ளாத உபத்திரவங்கள், நெருக்குதல்கள், துன்பங்களே இல்லை எனலாம். அவ்வாறான பயங்கரமான சந்தர்ப்பங்களின் மத்தியிலும் அவர் தைரியமாகக் கூறிய காரியம் "கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்?" என்பதாகும். (ரோமர் 8:36)

இன்று எமது தனிப்பட்ட வாழ்விலும், நாம் வாழும் சூழலிலும், எமது உறவுகளின் மத்தியிலும், எமது வேலைத்தலங்களிலும், நாம் மிகுந்த அன்பு செலுத்தும் உள்ளங்களிடமிருந்தும் எமக்கு வேதனைகள், ஏமாற்றங்கள், வஞ்சிப்புக்கள், தடைகள் வரும்போது நாம் அந்த நேரங்களில் என்ன செய்கிறோம்? எம் ஒவ்வொருவரையும் அதிகமாக நேசிக்கிற அந்த அன்பான தகப்பனிடத்தில் சொல்கிறோமா? அல்லது அந்த துன்பங்களிலே மூழ்கியவர்களாய் எமது விசுவாசத்திலிருந்து பின்வாங்கிப் போகிறவர்களாக இருக்கிறோமா? கடினப் பாதையில் இருக்கும் ஒவ்வொருவருக்கும் கர்த்தர் சொல்லும் காரியம், "உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு. ஆனாலும் திடன் கொள்ளுங்கள். நானே உலகத்தை ஜெயித்தேன்" (யோவான் 16:33) என்பதாகும். நாம் எதைக் குறித்தும் கவலைப்படாதவர்களாய், எல்லாவற்றையும் குறித்து ஸ்தோத்திரத்துடனே கூடிய ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் தேவனுக்கு தெரியப்படுத்தும்படி அழைக்கப்படுகிறோம்.

என்ன பாடுகள் வந்தாலும், எவ்வளவு கொடிய துயரம் சூழ்ந்துகொண்டாலும், எதிர்காலமே இருளாய்த் தோன்றினாலும், சர்வ வல்லமையுள்ள அந்த தகப்பனிடத்தில் அன்பாயிருந்து, அவர்மேல் விசுவாசத்தில் உறுதியுள்ளவர்களாய் அவரின் வார்த்தைகளில் ஆழமாய் வேரூன்றி, அவர்மேல் கட்டப்பட்டவர்களாய் ஸ்தோத்திரத்தில் பெருகும் போது எந்த கடினமான சூழ்நிலைகளையும் தலைகீழாக மாற்றிப் போட அவர் சித்தமுள்ளவராய் இருக்கிறார். தேவன் உண்மையுள்ளவராய் இருக்கிறார். திராணிக்கு மேலாக நாம் சோதிக்கப்பட இடங்கொடார். சோதனைகளோடு கூட அவற்றிற்கு தப்பிப்போகிற போக்கையும் அவர் உண்டாக்குகிறவராய் இருக்கிறார் (1 கொரி.10:13).

உலகத்தின் தற்காலிகமான இந்த குறுகிய வாழ்க்கையில் நேரிடுகிற எல்லா விதமான பாடுகளிலும், உபத்திரவங்களிலும், தேவனைப் பற்றிப் பிடித்தவர்களாய் அவருக்குள் பரிபூரணமுள்ளவர்களாகி, அவரது பெலத்துடன் பிசாசானவனை எதிர்த்து நிற்கும் போது கர்த்தர் எம்மை இடுக்கண்களுக்கு நீங்கலாக்கி காக்கிறவராயிருக்கிறார். அவருக்கு உண்மையுள்ளவர்களாய், அவரை மாத்திரம் உயர்த்துகிறவர்களாய், அவரது கற்பனைகளின்படி நடக்கும் போது, எமது துக்கங்களை சந்தோஷமாக மாற்றி, என்றென்றும் நித்தியமான மகிமையுள்ள பரலோக ராஜ்ஜியத்திலே அவருடனே கூட உட்பிரவேசிக்க எம்மையும் அழைத்துச் செல்வார்.

எமிலி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்மானங்கள் திருப்புமுனையாகட்டும்

## பேராயர் V.S.அசரியா வின் சவால்

**பேராயர் V.S. அசரியா**



**1874 - 1945**

அது ஓர் மாபெரும் மிஷனெரி மாநாடு. அலைகடல் என மக்கள் கூட்டம். மான்கள் நீரோடைகளைத் தேடித் தவிப்பது போல பேராயர் V.S.அசரியாவின் இறை வார்த்தைக்காக மக்கள் ஆவலாய் காத்துக்கொண்டிருந்தனர்.

இறை செய்தியின் இனிய நேரம். வேகமாய் பறக்கும் அம்புகளைப் போல் இறை பணியின் அவசியத்தையும், தேவைகளையும் அனைவர் உள்ளத்திலும் பாயச் செய்தார் அசரியா. இறை பணியின் வாஞ்சை பற்றி எரிந்தபோது....

"மிஷனெரிப் பணிக்காக உங்களில் அர்ப்பணிப்போர் எத்தனை பேர்? அவர்கள் முன்னே வரலாம்" அசரியா அறைகூவல் ஒன்றை விடுத்தார்.

திடீரென்று புயலெனச் சீறி எழுந்தான் ஒரு வாலிபன். "நீங்களே ஏன் ஒரு மிஷனெரியாகச் செல்லக்கூடாது?"

அந்தோ! அசரியாவின் உள்ளம் உடைந்தது. கதறிக் கதறி அழ ஆரம்பித்தார். இயேசுவின் கைகளில் இதயத்தைக் கொடுத்தார். 'தொர்ணக்கல்' என்ற பகுதியில் அவர் தன் கால்களைப் பதித்தார். அது கர்த்தரின் பூமியாகக் கனிந்தது. 8000 கிறிஸ்தவர்கள் என்ற எண்ணிக்கை 2,26,000 ஆக உயர்ந்தது.

"மாபெரும் மிஷனெரி, மிஷனெரி இயக்கத்தின் விடிவெள்ளி. முதல் இந்திய பேராயர் என்று போற்றப்பட்ட இவர் IMS, NMS, CSI போன்ற மாபெரும் நிறுவனங்கள் உருவாக அடித்தளமிட்டார்.

அஞ்சா நெஞ்சத்துடன் அயராது உழைத்தவர். "கிறிஸ்துவின் உத்தம தொண்டன். கிறிஸ்தவர்களின் வழிகாட்டி. "அர்ப்பணிப்பின் மகுடம்" என்ற பெரும் புகழுடைய V.S.அசரியா.

| | | |
|---|---|---|
| **பெயர்** | : | V.S.அசரியா |
| **மண்ணில்** | : | 17.08.1874 |
| **விண்ணில்** | : | 01.01.1945 |
| **ஊர்** | : | வெள்ளாளன் விளை |
| **நாடு** | : | இந்தியா |
| **தரிசனபூமி** | : | தோர்ணக்கல் – இந்தியா |

**மற்றவர்கள் செய்ய வேண்டும் என்று ஏன் எதிர்பார்க்கிறோம். நாமே கிறிஸ்துவின் பணியை எடுத்துச் செல்வோம். உன் வாழ்வின் தீர்மானங்கள் இயேசுவுக்காய் திருப்புமுனையாகட்டும்.**

உதவி : "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்"

**சகோ.சுரேன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உபத்திரவம் எமக்கு ஏதைக் கற்றுத்தருகிறது?



**வா**ழ்க்கைப் பாதையில் நாம் பயணிக்கையில் இன்பம், துன்பம் எல்லாம் மாறி மாறி வரும்போது எமது விசுவாசத்தின் படிகள் எப்படி அமைகிறது...? ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை சொந்த இரட்சகராய் நாம் ஏற்றுக்கொண்டு இரட்சிக்கப்பட்டபோது நாம் கொண்டிருக்கும் விசுவாசம் இன்பமான வேளைகளில் நிலைகொண்டிருந்தாலும் பாடுகள், பிரச்சினைகள், உபத்திரவங்கள் என வரும் போது நிலைத்திருக்கின்றதா?

அப்போஸ்தலனாகிய பவுல் II தீமோத்தேயு 3:12 இல் இவ்வாறு கூறுகிறார். "அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவ பக்தியாய் நடக்க மனதாயிருக்கிய யாவரும் துன்பப்படுவார்கள்" ஆச்சரியமாயிருக்கிறதா? "கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்" என்று கூறிய அதே பவுல் அப்போஸ்தலன்தான் தீமோத்தேயுவுக்கு இப்படிப் போதிக்கிறார். அப்படியானால் சந்தோஷமாய் இருக்கவேண்டிய கிறிஸ்தவனுக்கு பாடுகள், துன்பங்கள், உபத்திரவங்கள் ஏன் வருகிறது?

வேதாகம அடிப்படையில் இதைக்குறித்து சற்று ஆராய்ந்து பார்ப்போமானால், உபத்திரவத்தைக் குறித்து 4 உண்மைகளை இங்கே உங்களுடன் பகிர்ந்துகொள்கிறேன்.

1. உபத்திரவம் எமக்கு பொறுமையைக் கற்றுத்தருகிறது. **(ரோமர் 5:3,4)**
2. நாம் உபத்திரவப்படுவதினால் மற்றவர்களுக்கு ஆறுதலாய் மாறுகிறோம். **(II கொரிந்தியர் 1:6)**
3. எமது விசுவாசம் சோதிக்கப்பட்டு பொன்னாய் விளங்க நாம் உபத்திரவப் படுகிறோம். **(I பேதுரு 1:7)**
4. தேவனுடைய பிரமாணங்களை உபத்திரப்படுவதன் மூலம் கற்றுக்கொள் கிறோம். **(சங்கீதம் 119:71)**

பிரியமானவர்களே!

உபத்திரவங்களைச் சந்திப்போம். உபத்திரவங்களில் மேன்மை பாராட்டுவோம், விசுவாசத்தைக் காத்துக்கொள்வோம்.

**இயேசுகிறிஸ்துவுக்காய் நல்ல போர்ச் சேவகர்களாய் தீங்கனுபவிப்போம் !!! - (II தீமோத்தேயு 2:3)**

சகோதரி **வஜித்தா**
"வாலிபன் குடும்பம்"

**குறிப்பு : ஜோன் வெஸ்லி அடுத்த மாத இதழிலிருந்து மீண்டும் வருவார்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கை துறைமுகத்தையும், இயற்கை எழில் வீசும் கடற்கரையையும் தன்னகத்தே கொண்ட கிழக்கு மாகாணத்தின் தற்போதைய நிர்வாக தலைநகரம் தான் திருகோணமலை மாவட்டம். பல்லின மக்கள் ஒன்றாக வாழுகின்ற ஒரு மாவட்டம். யூதாவின் செங்கோல் மூலம் தமிழ் கிறிஸ்தவ உலகிற்கு நன்கறிந்த பிரதேசம் என்பதில் எதுவித ஐயப்பாடுமில்லை. எது எவ்வாறாயிருப்பினும் கிறிஸ்துதான் மெய்யான தெய்வம் என்பதை அறியாது மாயைக்கு பின்னால் அலைகிறவர்களும், அறியாமையாய் இருக்கிறவர்களும் அனேகராய் இருக்கி றார்கள் என்பதை நாமனைவரும் நன்கறிவோம்.

எமது வாலிபன் ஊழியத்தின் நூறு நாள் ஊழிய திட்டத்தின் ஒரு அங்கமாக திருகோணமலை மாவட்டத்திலும் ஊழியங்களை செய்ய கர்த்தர் கிருபையளித் தார். வாசல்களைத் திறந்து தந்த கர்த்தருடைய தாசகர்களுக்காக கர்த்தரைத் துதிக்கின்றோம். திருகோணமலை மாவட்டத்தின் வெவ்வேறு பகுதிகளில் 5 விதமான ஊழியங்களை தைமாதம் 21ம், 22ம் திகதிகளில் மேற்கொண்டோம்.


**சுவிசேஷ துண்டுப்பிரதி விநியோகம் :**

திருகோணமலை மாவட்டத்தின் எல்லைப்புற, மிகவும் பின்தங்கிய கிராம மான கிழிவெட்டி பகுதியில் சுவிசேஷ துண்டுப் பிரதியை விநியோகம் செய்தோம். எமது வாலிபன் குழுவினர்கள் அப்பகுதியில் மிக வும் பாரத்தோடு ஊழியத்தை ஆரம்பிக்கின்ற கர்த்தருடைய தாசனோடு இணைந்து ஒவ் வொரு வீடு வீடாகச் சென்று அவர்களுடன் உறவாடி, ஜெபித்து, துண்டுபிரதியை விநியோ கித்தனர். இதுவரை காலமும் ஒரு கிறிஸ்தவ ஆலயமும் இல்லாத நிலையில் ஏதாவது ஒன்றை வணங்க வேண்டும் என்று விக்கிரகத்துக்குப் பின்னால் செல்லுகின்ற கிறிஸ்துவை அறிந்த மக்களையும் சந்திக்க முடிந்தது. தயவாக கிழிவெட்டி மக்களுக் காக உங்கள் ஜெபங் களில் தாங்கிக்கொள் ளுங்கள். ஆத்துமாக் கள் இரட்சிக்கப்பட வும், சபைகள் ஸ்தா பிக்கப்பட கருத்தாய் ஜெபிக்கத் தவறா தீர்கள்.











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டாளிபுரத்தில்....

வறுமைக்கோட்டின் கீழ் வாழுகின்றதும், கடந்த கால யுத்தத்தினால் மிகவும் பாதிக்கப்பட்டதுமான ஒரு பிரதேசம். அடிப்படை தேவைகள் இன்னமும் சற்றும் சந்திக்கப்படாத சிறுவர்களைப் பார்க்கையில் மிகவும் மனம் உடைந்தோம். அப்படி இருக்கின்ற வேளையிலும் துதிக்கத் தவறாத ஒரு கூட்டம். உபவாச ஜெபத்தை நடத்தும் வேளையில் கர்த்தருடைய பிரசன்னம் ஆலயத்தை முற்றிலும் மூடியது. ஆளுகை செய்தது. கர்த்தரை துதிக்கின்ற ஜனத்தை கர்த்தர் அந்த இடத்தில் எழுப்பியுள்ளார். கர்த்தருக்கே ஸ்தோத்திரம். 3 மணிநேர உபவாச வேளையில் அவர்களோடு இணைந்து தேசத்துக்காக, குறிப்பாக அப்பகுதிக்காக ஜெபித்தோம். கர்த்தர் தாமே அப்பகுதியில் பெரிதான மாற்றத்தை ஏற்படுத்துவாராக!

மாலை 2.30 மணிக்கு சிறுவர்களுக்கான விஷேட நிகழ்வு ஆரம்பமானது. ஏறக்குறைய 50 சிறுவர்கள் நிகழ்வில் பங்குபற்றினார்கள். வாலிபன் சிறுவர் பணிக்குழுவினர் சிறப்பாக நிகழ்வை ஒழுங்கு படுத்தி நடாத்தினார்கள். கர்த்தர் அந்த சிறுவர்களை ஆசீர்வதித்து, ஆசீர்வாதத்தின் பாத்திரங்களாக உயர்த்த வேண்டும் என கருத்தாய் ஜெபியுங்கள். எதிர்வரும் நாட்களில் அப்பகுதியில் ஒரு வைத்திய முகாம் ஒன்றினை நடாத்த ஆவியில் ஏவப்படுகின்றோம். இவ் ஊழியத்தில் இணைந்துகொள்ள விரும்புகிறவர்கள் தயவாக எம்மைத் தொடர்பு கொள்ளுங்கள்.









22ம் திகதி ஞாயிறு ஆராதனையை திருகோணமலை டொக்யாட் வீதி, மெதடிஸ்த ஆலயத்தில் நடாத்த கர்த்தர் கிருபையளித்தார். வாலிபன் குடும்பமாக ஆராதனையை நடத்தினோம்.

ஆராதனையைத் தொடர்ந்து திருகோணமலை பகுதி வாலிபர்களுக்கான ஒன்று




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடல் ஒழுங்குபடுத்தப்பட்டது. கர்த்தருடைய வார்த்தையை அவர்களோடு பகிர்ந்துகொள்ளவும், ஊழியங்களை குறித்துப் பேசவும், கிறிஸ்து இயேசுவுக்காக வாலிபர்கள் எழுந்து பிரகாசிக்கச் செய்யவுமாக ஒன்றுகூடல் வழியமைத்தது. குறிப்பாக திருகோணமலைப் பகுதியிலுள்ள கிறிஸ்து இயேசுவை அறியாத வாலிபர்களுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள். யோசுவா சேனை அங்கிருந்து புறப்பட வேண்டும் என வாஞ்சிக்கின்றோம்.

மீண்டுமாக திருகோணமலை பகுதியில் ஊழியங்களை மேற்கொள்ள உதவிய ஒவ்வொரு கர்த்தருடைய தாசர்களுக்காய் கர்த்தரை ஸ்தோத்தரிக்கின்றோம். குறிப்பாக திருகோணமலை சேகர முகாமைக்குரு அருட்திரு.சுஜிதர் சிவனாயகம், மூதூர் - வாகரை சேகர முகாமைக்குரு அருட்திரு.நிஷாந்தன், பரலோக தரிசன அறுவடை சபை பாஸ்டர்.ஜீவன் அவர்களுக்கு வாலிபன் குடும்பத்தின் விசேஷித்த நன்றிகள். தொடர்ந்து இவ்வூழியர்களுக்காக, ஏனைய திருகோணமலையில் ஊழியம் செய்கிற கர்த்தருடைய தாசர்களுக்காக ஜெபித்துக்கொள்ளுங்கள். கர்த்தர் தாமே திருகோணமலையில் பெரிய அசைவை ஏற்படுத்துவாராக!

திருமலை ஊழிய ஒருங்கிணைப்பாளர் சார்பாக

**சகோதரி குளோரி பிரிசில்லா**



உங்கள் ஜெபத் தேவைகளை எங்களுக்குத் தபால் மூலமாகவோ, மின்னஞ்சல் மூலமாகவோ, **SMS** மூலமாகவோ அனுப்பி வைக்கலாம்.

**SMS க்கான இலக்கங்கள் :**

**077-7813269, 077-2335106, 0779-584930, 077-7718847**



வாலிபர்களுக்கான விஷேட ஜெபம் ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் காலை 7.00 மணிக்கு **கோட்டைமுனை மெதடிஸ்த ஆலயத்தில்** இடம்பெறும்.

**இப்புத்தகத்தை தங்களது சபைகளிலும், அறிமுகம் செய்ய விரும்புபவர்கள் தயவாய் எம்மைத் தொடர்பு கொள்ளவும். இதன் மூலமாய் வரும் ஆசீர்வாதங்கள் தங்களது வாழ்வையும், சபைகளையும் நிரப்புவதாக!**

**மெதடிஸ்த வாலிபர் ஒன்றியம்**
**கோட்டைமுனை.**

கடிதத் தொடர்புகளுக்கு :

**ஆசிரியர்,**
**"வாலிபன்" சஞ்சிகை,**
மெதடிஸ்த ஆலயம், கோட்டைமுனை,
மட்டக்களப்பு, இலங்கை.
மின்னஞ்சல் :vaalipan_kyf@yahoo.com

சன் அச்சகம் - மட்டக்களப்பு. 065-2222597



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org